தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.

தொலைபேசி எண்.044–2951 5590

ஆணை நாள். 18.11.2026

காணொளி காட்சி விசாரணை

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : CP 3845/A/2024

திரு.கு. செல்வம் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆலங்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் – 622 301. .. பொது அதிகார அமைப்பு

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 18.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.கு. செல்வம் அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். திரு. அ. திருப்பதி வெங்கடாசலம், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஆலங்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 06.05.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகபட்டா கிளர்க் துணை வட்டாட்சியர் பெயர், பதவியின் பெயர், மாத வருவாய், பணிப்பதிவேடு. மேற்படி அதிகாரி இதற்கு முன் எங்கு பணிபுரிந்தார், பணிபுரிந்த ஊர் பதவியின் பெயர், இடைக்கால பணி நீக்கம்,

என்பது போன்ற தகவல்களை 5 இனங்களில் தகவல் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் ஏதும் வழங்காத காரணத்தால், 20.06.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 19.08.2024 நாளிட்ட பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.. அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 18.11.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து காணொளி காட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ஏற்கனவே 21.05.2024 மற்றும் 13.11.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக அனைத்து இனங்களுக்கான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, இப்புகார் மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண் CP-3845/A/2024
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆலங்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 301.



மனுதாரர்:
திரு.கு. செல்வம்,
கீரமங்கலம் வடக்கு & அஞ்சல்,
ஆலங்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 614 624.

Copy to File
Je/PA 19.11.2026

DESPATCHED